**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 323/2019**

திரு. முத்துசாமி (P.W. –1) **29.07.2026**

**<u>மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1 நான் தாக்கல் செய்த முதன்மை சாட்சிய பிரமான வாக்குமூலத்தின் விபரங்களை நான் கூறி தான் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய முதன்மை சாட்சிய பத்தி 6ல் 26.06.2014 மற்றும் 07.1.2017 தேதியிட்ட வாடகை ஒப்பந்தங்களின் நகல்களை தாக்கல் செய்துள்ளதாகவும் அவைகளை எனது தரப்பு சான்றாவனங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி ஆவணங்களை நான் இவ்வழக்கில் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

2. 05.04.2018 ஆம் தேதி அன்று ஐந்தாவது பிரதிவாதி வங்கிக்கு கடிதம் கொடுத்து வாடகை ஒப்பந்தங்களை எனக்கு தர கோரி இருந்த நிலையில், 5ம் பிரதிவாதி வங்கி என்னிடம் மூன்று வாடகை ஒப்பந்த நகல்களை கொடுத்துவிட்டு, அவைகள் அவர்கள்(பிரதிவாதிகள் 1 முதல் 4 ) கடன் பெற்ற போது கொடுத்தாக தெரிவித்தாக எனது முதல் விசாரணை பிரமான வாக்குமூலம் பத்தி 6 ல் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இரண்டு வாடகை ஒப்பந்த பத்திரங்களை நான் இன்றைய தேதி வரை வங்கியில் இருந்து பெற்று தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவைகள் மோசடியானவை என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை.

3. மேற்படி ஆவணங்கள் இரண்டும் மோசடியான ஆவணங்கள் என்று கூறும் நிலையில் 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகளின் மீது கோரப்பட்டுள்ள பரிகாரம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.நான் இவ்வழக்கை தாக்கல் செய்யும்போது பிரதிவாதிக்கு சொந்தமான என்னென்ன இயந்திரங்கள் என்னென்ன இருந்தன என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த பொருட்கள் அனைத்தும் தற்போது வரை என்னுடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த மிஷின்கள் ஒவ்வொன்றும் 500 முதல் 1000 கிலோ எடையுள்ளவை என்று சொன்னால் அதை எடை பார்த்தால் தான் தெரியும்.

4. அந்த மெஷின்கள் அனைத்தும் பூமியோடு பொருத்தப்பட்டுள்ள மெஷின்கள் என்றால் சரியல்ல. தரையில் வைக்கப்பட்ட மெஷின்கள் தான். தற்போது பிரதிவாதிகளுக்கு வாடகைக்கு விட்ட இடத்தில் தான் நான் கட்டிடம் கட்டி வருகிறேன் என்றால் சரிதான். 10 ஆண்டுகாலம் ஆகிவிட்டபடியால் இடத்தில் கட்டடம் கட்டி வருகிறேன். அந்த இயந்திரங்களை தற்போது எங்கு வைத்துள்ளேன் என்றால் மொத்த இடம் 6 ஆயிரம் சதுர அடியாக அதில் 3000 சதுர அடியில் இயந்திரங்களை எடுத்து வைத்து விட்டு 3000 சதுர அடியில் கட்டிடம் கட்டி வருகிறேன்.

5. வங்கியில் நான் 05.04.2018 ம் தேதியன்று வாடகை ஒப்பந்தங்களை தர கோரி கொடுத்த கடிதத்தையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 11.09.2018 ல் நான் மறுபடியும் வங்கிக்கு கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆகவே நான் என்னுடைய முதன்மை சாட்சிய பிரமாண வாக்கு மூலத்தில் 11.9.2018 அன்று வங்கிக்கு கடிதம் கொடுத்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல.

6. என்னுடைய முதன்மை சாட்சியை பிரமாணவாகும் மூலம் பத்தி ஆறில் கூறியுள்ள மூன்று வாடகை ஒப்பந்த பத்திரங்களும் என்னால் போடப்பட்ட ஒப்பந்த பத்திரங்கள் தான் எனவும், அதன் அடிப்படையில் தான் நான் மாதம் 42,000 வாடகை பெற்று வந்துள்ளேன் எனவும், தற்போது வழக்கிற்காக துற்லாபம் அடைய வேண்டி ஒரு வாடகை ஒப்பந்தம் போட்டதாக பொய் கட்சி ஆடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது தாவா சொத்தில் இருந்த பொருட்களை எடுத்து பொதுஏலம் விற்பனை செய்து நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய மனு தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 30.3.2018 ஆம் தேதி அன்று திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் என் மீது புகார் கொடுத்து புகார் கொடுத்து இருந்தார்கள் என்றால் சரிதான்.

7. சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பொருட்களை என்னுடைய கட்டுப்பாட்டிற்குள் இன்றைய தேதி வரை வைத்திருப்பதால் நான் தான் பிரதிவாதிகளுக்கு அதற்கான மதிப்பீடு இழப்பிற்கு தொகை கொடுக்க கடமைப்பட்டவன் என்று சொன்னால் சரியல்ல. மார்ச் 2018 ல் தாவா சொத்தில் இருந்து 1 முதல் 4 பிரதிவாதிகளை காலி செய்ய சொன்னதாக என்னுடைய வழக்குரையிலும் முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இயந்திரங்களை வைத்துக்கொண்டு பிரதிவாதிகளை இயந்திரங்களை எடுக்க விடாமல் தடுத்து வருவதால் நான் இவ்வழக்கில் கூறிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல

என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள படி பிரதிவாதிகள் எவ்வித வாடகை பாக்கியும் வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

UMA MAHESHWARI

Digitally signed by UMA MAHESHWARI
Date: 2026.07.29 17:46:24 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.